**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110235

1. District மாவட்டம் : Krishnagiri  PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption  Year ஆண்டு: 2022  FIR No.: மு.த.அ. எண் 04/AC/2022  Date: நாள் 15.10.2022

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018.  Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை 14.10.2022
Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை Before 16.30 hours.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 15.10.2022  Time : நேரம் 07.00 hours.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Suo moto

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் 55 kms North, Transport Department Inward checkpost, Zuzuvadi, Hosur.
Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. VADIVEL  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் RAMAN
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 05.06.1982  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் DSP  (g) Address : முகவரி Vigilance and Anti corruption. Krishnagiri

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. N. Sumesh, Motor vehicle Inspector, Inward checkpost, Hosur.
2. S. Sudhakar, Assistant, Inward check post, Hosur.
3. B.R. Sampath, Office Assistant, Inward Checkpost, Hosur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
No Delay

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
15-10-2022 @ 09.00 hrs.

Name: பெயர் R. VADIVEL
Rank: நிலை DSP No. எண் .........

**கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.4/AC/ 2022, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்-12 ன் தொடர்ச்சி.**

14.10.2022 ஆம் தேதி 1400 மணியளவில் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருந்த போது கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் ஜூஜூவாடி போக்குவரத்து உள்வழி சோதனை சாவடியில் உள்ள அலுவலர்கள் நேரடியாகவும் மற்றும் தனி நபர்கள் மூலமாகவும் வெளி மாநிலத்தில் இருந்து தமிழ்நாட்டிற்குள் நுழையும் வாகன ஓட்டுநர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக் கொண்டு தற்காலிக அனுமதி சீட்டு வழங்குவதாகவும், நடை சீட்டுகளில் முத்திரை பதிப்பதாகவும், விதிமீறல்கள் ஏதேனும் இருப்பின் அதன்பேரில் இணக்க கட்டணம் விதிக்காமல் அனுப்பி விடுவதாகவும் கிடைத்த ரகசிய தகவலின்படி அரசு சாட்சிகள் திரு.M.செந்தில் நாதன், துணை வட்டாட்சியர் (தேர்தல் பிரிவு), வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி மற்றும் திரு.M.செல்வம், முதுநிலை வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி ஆகியோர் முன்னிலையில் 14.10.2022 ஆம் தேதி 16.30 மணி முதல் 23.45 மணி வரை உள்வழி சோதனை சாவடி காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய என்னால் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் சோதனையின் போது உதவியாளர் திரு.S.சுதாகர் அவர்களால் அரசு கணக்கில் பல்வேறு தலைப்புகளின் கீழ் 14.10.2022 ஆம் தேதி 08.00 மணி முதல் 16.30 மணி வரை வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை ரூபாய் 2,58,614/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி தொகை அரசு சாட்சிகளால் சரிபார்க்கபட்டது. மேலும் அரசு கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு உதவியாளர் திரு.S.சுதாகர் அவர்களிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பிறகு மேற்படி அலுவலகத்திலிருந்த ஒரு நபரை பற்றி விசாரிக்க தனது பெயர் திரு. B.R.சம்பத் என்றும் தான் சோதனை சாவடியில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் ஆம் என்று சொல்லி தனது இடதுபுற முன்பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்து மடிப்புடன் கூடிய 500 ரூபாய் தாள்கள் எடுத்து ஆஜர் செய்தார். அதனை காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில் அதில் 500 ரூபாய் தாள்கள் 200 எண்ணிக்கையில் ஆக மொத்தம் ரூபாய் 1,00,000/- இருந்தது. மேற்படி பணத்தைப் பற்றி திரு.B.R.சம்பத் அவர்களிடம் விளக்கம் கேட்க

அவர் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுப்பதற்கு தனக்கு தனியாக கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் உதவியாளர் திரு.S.சுதாகர், அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் ஆம் என்று சொல்லி தனது பேண்டின் வலதுபக்க முன்புற பாக்கெட்டிலிருந்து ரூபாய் 7750/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த தொகை குறித்து உதவியாளர் திரு.S.சுதாகர் அவர்களிடம் கேட்க, தனது சொந்த பணம் என்று தெரிவித்தார். அப்போது காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் Personal Cash Register -ல் பதிவு உள்ளதா என்று பார்த்ததில் அவரது பெயருக்கு நேராக ரூபாய் 3,000/- என்று எழுதப்பட்டிருந்தது. ஆகையால் மீதமுள்ள தொகை ரூபாய் 4,750/- பற்றி உதவியாளர் திரு.S.சுதாகர் அவர்களிடம் கேட்க அவர் இன்றைய தினம் வாகன ஓட்டுநர்களுக்கு விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் அவர்களால் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட கையூட்டு பணம் என்றும் தெரிவித்தார். ஆகவே மீதமுள்ள பணம் கையூட்டாக பெறப்பட்ட பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் கைப்பற்றப்பட்டது. அதை தொடர்ந்து காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.சுமேஷ், அவர்களின் இருக்கைக்கு முன் இருந்த டேபிளின் மேல் ஒரு அட்டை பெட்டியினுள் ரூ.50,000/- இருந்தது. அந்தப் பணத்தைப் பற்றி அவரிடம் கேட்க, அது வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட கையூட்டு பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின் போது அந்த பணம் ரூ.50,000/- என்னால் கைப்பற்றப்பட்டது. பிறகு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.சுமேஷ் அவர்களிடம் வேறு பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க அவர் தன்னுடைய வலது பக்க டேபிள் டிராயரிலிருந்து ரூ.50,000/- எடுத்து அரசு சாட்சிகளின் முன்னிலையில் ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி அவரிடம் கேட்க அந்தப் பணம் வாகன ஓட்டுநர்களால் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.சுமேஷ் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் அந்த பணம் ரூ.50,000/-

கைப்பற்றப்பட்டது. அதன்பிறகு உள்வழி சோதனை சாவடியின் கிழக்கு பக்கம் உள்ள முதல் அறைக்கு சென்ற பார்த்தபோது அந்த அறையை சந்தேகத்தின் அடிப்படையில் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் அரசு சாட்சிகளின் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டதில் அந்த அறையின் வடக்கு சுவற்றின் மேல் பக்க ஸ்லாப்பில் ரூபாய் 25,500/- இருந்தது. மேற்படி அந்த தொகை குறித்து மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.சுமேஷ் அவர்களிடம் காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் கேட்க, அவர் வாகன ஓட்டுநர்களுக்கு நடைச்சீட்டில் சீல் போட்டுக் கொடுத்தமைக்காகவும், விதி மீறல்கள் மீது இணக்கக் கட்டணம் வசூல் செய்யாமலிருக்கவும், தற்காலிக அனுமதி சீட்டு வழங்கியதற்காகவும் அவர்களால் தனக்கு தனியாக கொடுக்கப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார். ஆகவே அந்தப் பணம் ரூ.25,500/- கையூட்டு பணம் என்பதால் செயல்முறை நடவடிக்கையின் போது என்னால் கைப்பற்றப்பட்டது. இது சம்மந்தமாக 14.10.2022 ஆம் தேதி 16.30 மணி முதல் 23.45 மணி வரை என்னால் ஒரு செயல்முறை நடவடிக்கை தயார் செய்யப்பட்டது அதன் நகலை மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.சுமேஷ் அவர்களுக்கு வழங்கப்பட்டது. பிறகு கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,30,250/- உடன் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து, பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.சுமேஷ் அவர்கள் வாகன ஓட்டுநர்களுக்கு தனது அலுவல் பணியை முறையற்ற வகையிலும் நேர்மையற்ற முறையிலும் செய்து கொடுத்தமைக்காக அவர்களிடமிருந்து கையூட்டாக பணம் பெற்றுக்கொண்டற்கும் மேலும், பொது ஊழியரான மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.N.சுமேஷ் அவர்கள் ஓட்டுநர்களிடமிருந்து மேற்படி சோதனை சாவடியில் பணிபுரியும் உதவியாளர் திரு.S.சுதாகர் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.B.R.சம்பத் அவர்கள் கையூட்டாக பெற்றுக்கொண்டதன் பொருட்டு அவர்களின் மீது U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி குற்ற வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை கிருஷ்ணகிரி சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

[signature]
15/10/2022

DSP
Vigilance and Anti Corruption
Krishnagiri.